STC.No.232/2025 PW1.திரு.சம்பத்குமார்
தேதி– 01.04.2026
எதிரி ஆஜர்.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் தேனி முல்லை நகரில் குடியிருந்து வருகிறேன். நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் வருடத்தில் எங்கு குடியிருந்தேன் என்றால் தேனியில் குடியிருந்தேன். எதிரி எந்த தேதியில் வந்து பணம் கேட்டார் என்றால் நான் பணம் கொடுத்த தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பு வந்து பணம் கேட்டார். நான் விவசாயம் தொழில் செய்து வருகிறேன். எனக்கு மாத வருமானம் எவ்வளவு என்றால் வருடத்திற்கு மூன்று, நான்கு லட்சம் கிடைக்கும். எதிரி எனக்கு எத்தனை வருடம் பழக்கம் என்றால் நான் பணம் கொடுப்பதற்கு மூன்று மாதத்திற்கு முன்பில் இருந்து பழக்கம். எதிரியின் காளவாசல் எங்கு உள்ளது என்றால் போடியில் உள்ளது. புகார் மனுவில் எதிரி என் முன்னிலையில் காசோலையை பூர்த்தி செய்து கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் எதிரி காசோலையை எழுதிக் கொண்டு வந்து என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.எதிரி காசோலையை பூர்த்தி செய்தார் என்பதற்கு சாட்சி உள்ளதா என்றால் இல்லை. காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எதிரியிடம் எவ்வாறு தகவல் கூறினேன் என்றால் போனில் கூறினேன்.

2. நான் எதிரியிடம் தகவல் கூறியதற்கான ஆவணத்தை தாக்கல் செய்ய தயாரா என்றால் தயார்.காசோலை எதற்காக திருப்பப்பட்டது என்றால் கணக்கு முடக்கப்பட்டது என்ற காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டது. காசோலை எண்கள் 695295,695296 ஆகும். போடி மீனாட்சிபுரத்தை சேர்ந்த எஸ் பி எஸ் மணி என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவர் எனது அண்ணன் முறை ஆவார்.மேற்படி மணியும், எதிரியும் ஒரே ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த காசோலையில் உள்ள கையொப்பம் ஒரு மையிலும் மற்ற எழுத்துக்கள் வேருமையிலும் உள்ளது என்றால் சரிதான்.காசோலையை எதிரி பூர்த்தி செய்யவில்லை என்றும்,

நானே பூர்த்தி செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. எதிரி போடி தாலுக்கா காவல் நிலையத்தில் 22.08.2025 தேதி அன்று மணி என்பவர் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. மேற்படி விபரம் எனக்கு தெரியும் என்றும், தற்போது தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. காசோலையில் எனது பெயர் மற்றும் தொகை ஆங்கிலத்திலும், கையொப்பம் தமிழிலும் உள்ளது உள்ளது என்றால் சரிதான், எதிரிதான் காசோலையை கொடுத்தார். மேற்படி மணி என்பவருக்கும், எதிரிக்கும் வரவு செலவு இருந்தது என்றும் அந்த வரவு செலவுகளை எதிரி முடித்துவிட்டார் என்றும் மணியிடம் கொடுத்த காசோலையை வைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.எதிரி எனக்கு பதிலறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். புகார்தாரருக்கும் எனக்கும் எந்த வரவு செலவும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.04.01 18:36:36 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam